SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

பால்வளத்துறை – வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை பிரித்து புதியதாக திருப்பத்தூர் மாவட்டத்திற்கென ஒரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைத்தல் – 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம்,பிரிவு–13க்கு விலக்களித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(பாஉ.2)துறை

அரசாணை (2டி) எண்: 16 — நாள்: 13.06.2022

சுபகிருது, வைகாசி–30
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்களின் ந.க.எண்.2310 /என்.3/2022, நாள்.28.03.2022.

------

**ஆணை:–**

16–வது சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடரில் 13.04.2022 அன்று கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது பால்வளம் தொடர்பான (மானியக் கோரிக்கை எண்.8) 2022–2023ம் ஆண்டுக்கான இதர பிற அறிவிப்புகளுடன் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

**"35. திருப்பத்தூர் மாவட்டத்திற்கு திருப்பத்தூரை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து உருவாக்கப்படும்"**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர், அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைப்பது என்பது அம்மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையாகும் என்றும், இதனை மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் பரிந்துரைத்துள்ளார் என்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை விவகார எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது என்றும், இதன் தலைமை அலுவலகம் வேலூர் சத்துவாச்சாரியில் அமைந்துள்ளது என்றும், மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்படுவதால் நிர்வாக இடர்பாடுகள் ஏற்படுவதுடன் பால் உற்பத்தியாளர்களின் தேவையினை கண்டறிந்து அனைத்து கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய சேவையை, உரிய நேரத்தில் வழங்குவதில் பெரிதளவு தாமதம் ஏற்படுகிறது என தெரிவித்து

(த.பி.பா)

வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை பிரித்து தனியே புதிதாக திருப்பத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் தற்போது திருப்பத்தூர் மாவட்டத்தில் 06 தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்கள் மற்றும் 39 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன என்றும், திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு சுமார் 22,500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது என்றும் அதில் 2050 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது என்றும், இது தவிர பால் உபபொருட்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.60,000/- மதிப்பிற்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் வேலூர் மாவட்டத்தை பொறுத்தவரை 15 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் மற்றும் 166 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன என்றும் மாவட்டத்தில் நாளொன்றுக்கு சுமார் 61,361 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு 3,777 லிட்டர் பால் உள்ளூர் விற்பனை செய்யப்படுகிறது என்றும் பால் உபபொருட்கள் மூலம் பிரதி மாதம் ரூ.1.22 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் புதியதாக துவங்கப்பட உள்ள திருப்பத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய நிர்வாகத்தை கவனிக்க 17 உறுப்பினர்களை கொண்ட ஒரு நிர்வாக குழுவினை கொண்டு செயல்படுத்தலாம் என்றும் ஆறுமாத காலத்திற்குள், கூட்டுறவு சங்க தேர்தல் மூலம் புதிய நிர்வாக குழு உறுப்பினர்களை தேர்வு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

4. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள், திருப்பத்தூர் மாவட்டத்திற்கென ஒரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க உரிய அனுமதி வழங்குமாறும் 1983ம் ஆண்டு கூட்டுறவு சட்ட பிரிவு 170ன்கீழ் மேற்படி சட்டம், பிரிவு 13-க்கு திருப்பத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு விலக்கு அளித்து கீழ்க்கண்ட உத்தரவுகளை அரசு வழங்குமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்:

1. 1983ம் ஆண்டு கூட்டுறவு சட்ட பிரிவு 170ன் கீழ் மேற்படி சட்டம், பிரிவு 13-க்கு வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு விதிவிலக்கு அளித்து திருப்பத்தூர் மாவட்டத்திற்கென புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைக்க அனுமதி அளித்தல்.
2. புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட பின்னர் சம்மந்தப்பட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றிய பேரவை கூட்டி பின்னேற்பு ஒப்புதல் பெற அனுமதி அளித்தல்.
3. புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள திருப்பத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் தற்போது உள்ள நிலையில் அந்த மாவட்டத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் அல்லது வாடகை கட்டிடத்தில் இயங்க அனுமதி அளித்தல்.

4. புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள ஒன்றியத்தின் நிர்வாக பணி மற்றும் பால்பண்ணை பணிகளை ஏற்கனவே பணியில் உள்ள வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்களை கொண்டே மேற்கொள்ள அனுமதித்தல் மற்றும்;
5. புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள திருப்பத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு புதிய பால்பண்ணை ஏற்படுத்தும் காலம் வரை தேவையான பாலை அருகாமையில் உள்ள பால் பண்ணைகள் மூலமாக பதப்படுத்தி கொள்ள அனுமதித்தல்.

5. ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்களின் கருத்துருவினை அரசு விரிவாக ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்வதுடன், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 170ன் கீழ், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை பிரித்து புதியதாக திருப்பத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க, பால் கூட்டுறவு சங்கங்களின் செயல்பதிவாளரான பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையருக்கு அனுமதியும், ஒன்றிய பேரவையைக் கூட்டி தீர்மானிப்பதற்கு 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 13(1)-க்கு விலக்கு அளித்தும் மற்றும் பத்தி 4ல் உள்ள (1) முதல் (5) வரை உள்ள இனங்களுக்கு பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் மற்றும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு.ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை-51.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-35.
<u>நகல்</u> :
மாண்புமிகு அமைச்சர் (பால்வளத்துறை) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-09.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனி செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
14/6/22